முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், குளித்தலை

அசல் வழக்கு எண் 223/2015

வாதி தரப்பு சாட்சி-2 ஜானகிராமன் திரு.ஆர்.ஞானசேகரன் பெஞ்ச் கிளார்க் அவர்களால் 44/1969 வது பிரிவின் கீழ் பிரமாணம் செய்யப்பட்டு 14.10.2024 ம் தேதியில் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | ஜானகிராமன் | கிராமம் | |
| த/பெ / க/பெ. | நீலமேகம் | தொழில் | |
| தாலுக்கா | | மதம் | |
| ஜாதி | | வயது | 36 |

**2 முதல் 7 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

1. எனக்கு நீதிமன்றத்தில் இருந்து அழைப்பாணை வரவில்லை என்றாலும், வாதி அழைத்ததின் பேரில் சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரிதான். நான் பொருந்தலூர் கிராமம், தெலுங்கப்பட்டியில் குடியிருக்கிறேன் என்றும், தாவா சொத்து தோகைமலையில் உள்ளது என்றாலும் சரிதான். தாவா சொத்து தோகைமலையில் எந்த பகுதியில் உள்ளது என்றால் பழனிகவுண்டம்பட்டியில் உள்ளது. பழனிகவுண்டம்பட்டியில் எனக்கு சொந்தமான வீடு, சொத்து இல்லை என்றால் சரிதான். எனக்கு அந்த ஊரில் உறவினர்கள் இருக்கிறார்கள். இந்நீதிமன்றத்தில் வேறு வழக்குகளும் நடத்தியுள்ளேன் என்றால் சரிதான். குற்றவியல் நீதிமன்றங்களிலும் என் மீது வழக்குகள் உள்ளதா என்றால் இல்லை, முடிந்துவிட்டது.

2. வாதியின் பாட்டா பெயர் தெரியுமா என்றால் பழனிகவுண்டர். குட்ட கவுண்டர் என்று சொல்லி அழைப்பார்கள். குட்டகவுண்டர் எப்போது இறந்தார் என்றால் தெரியாது. அவர் இறந்து பல வருங்கள் ஆகிறது. வழக்கு விவரங்கள் எனக்கு யார் சொல்லி தெரியும் என்றால் வாதியின் வீட்டிற்கு அடிக்கடி நான் போவேன். அவர் சொல்லி தெரியும். தாவா வழக்கின் பரிகாரம் பற்றி தெரியுமா என்றால் வாதி எனது இடம் என்று சொல்கிறார். பிரதிவாதிகள் கோவில் இடம் என சொல்கிறார்கள். தாவா சொத்திற்கு பட்டா யார் பெயரில் உள்ளது என்றால் வாதி பெயரில் பட்டா எண்.365

ஒன்று உள்ளது. பட்டா எண்.365 ல் உள்ள இடத்திற்கு தான் வழக்கு நடக்கிறதா என்றால் இல்லை. அவர் அனுபவத்தில் உள்ள இடத்திற்கு வழக்கு நடக்கிறது. அனுபவத்தில் உள்ள இடம் யார் பெயரில் பட்டா உள்ளது என்றால் வாதி பெயரில் உள்ளது.

3. வாதி பெயரில் பட்டா உள்ள இடத்திற்கு வழக்கு நடக்கிறதா என்றால் இல்லை. அதை ஒட்டி அவர் அனுபவத்தில் உள்ள இடத்திற்கு நடக்கிறது. வாதியின் அனுபவத்தில் இருப்பதாக சொல்லும் இடம் யார் பெயரில் உள்ளது என்றால் அரசாங்கம் பெயரில் உள்ளது. அரசாங்கம் பெயரில் உள்ள நிலம் மொத்த விஸ்தீரணம் எவ்வளவு என்றால் தோராயமாக 1 ½ செண்ட் இருக்கும். அரசு நத்தம் நிலம் மொத்த எவ்வளவு விஸ்தீரணம் என்றால் சுமார் 5 செண்ட் இருக்கும். அதில் 1 ½ செண்ட் நிலம் வாதியின் அனுபவத்தில் உள்ளது. பிரதிவாதிகள் பெயர் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. பிரதிவாதிகள் அதே ஊரில் வசிப்பவர்களா அல்லது வேறு ஊர்க்காரர்களா என்றால் அதே ஊரில் வசிப்பவர்கள். தாவா சொத்தை சுற்றி நத்தம் இடத்தில் சுமார் 50, 60 வீடுகள் இருக்குமா என்றால் இருக்கும். சர்வே எண்.398/17 அரசாங்கம் நிலம் ஆகும். அரசாங்கம் நத்தம் நிலம் 5 செண்ட்டின் வடக்கே யார் நிலம் உள்ளது என்றால் வடக்கே ரோடு செல்கிறது.

4. கிழக்கே காலி இடம் உள்ளது. மேற்கே காலி இடம் உள்ளது. தென்புறம் தார் ரோடு உள்ளது. எனக்கு தாவா சொத்தை பற்றி எதுவும் தெரியாது என்றால் சரியல்ல. நான் வேறு ஊரை சேர்ந்தவர் என்றும், எனக்கு தாவா சொத்தை பற்றி எந்த விவரமும் தெரியாது என்றால் சரியல்ல. நான் மற்ற வழக்குகளில் ஆஜரான அனுபவத்தை பயன்படுத்தி வாதி கேட்டுக்கொண்டதற்கிணங்க இவ்வழக்கில் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எனது முதல் விசாரணையில் உள்ள சங்கதிகள் அனைத்தும் வாதி சொன்னதின் அடிப்படையில் தயார் செய்யப்பட்டு அதற்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

Taken down by me in open court read over interpreted in the witness and acknowledged by him /her to be correct.

Sd/-R.தமிழரசி

**Principal District Munsif,**
**Kulithalai.**